**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 401/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-4/PW- 3 | Village: | |
| Name | :டேனியல் ராஜ் | Age | :40 |
| Father's/Husband's Name | : சந்தாணம் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 20/03/2023**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமை காவலர் திருமதி டென்னிசா மேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது மானம்பாடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் இரு சக்கர வாகனத்திற்கான ஸ்பேர் பார்ட்ஸ் கடை வைத்துள்ளேன். விபத்தில் இறந்துபோன ராபர்ட் ஸ்டான்லியை எனக்கு தெரியும். அவர் கடந்த 16/05/2015 ம் தேதி இரவு 11.30 மணியளவில் சோழபுரம் நடுத்தெரு அருகில் இரு சக்கர வாகனத்தில் வந்து, அவரது வீட்டிற்கு வருவதற்காக சாலையை கடக்க முற்பட்டபோது, கும்பகோணத்தில் இருந்து சென்னையை நோக்கி வந்த அரசு பேருந்து இரு சக்கர வாகனத்தில் வந்த ராபர்ட் ஸ்டான்லி மீது மோதியதாகவும், அவரை திருப்பனந்தாள் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், தகவல் கேள்விப்பட்டு திருப்பனந்தாள் அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். அங்கு திருப்பனந்தாள் போலிசார் இறந்துபோன ராபர்ட்

ஸ்டான்லியின் பிரேத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள். நானும் உடன் இருந்தேன். என்னையும் விசாரணை செய்தார்கள். விபத்தின் காரணமாக ராபர்ட் ஸ்டான்லி இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். மேற்படி பேருந்தை சம்பவத்தன்று ஓட்டிய ஓட்டுநரின் பெயர் கண்ணன் என்று பின்னர் தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

எதிரி ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
## THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 401/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-3/PW- 2 | Village: | |
| Name | : ரமேஷ் | Age | :51 |
| Father's/Husband's Name | : ஏகநாதன் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 20/03/2023**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமை காவலர் திருமதி டென்னிசா மேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது மானம்பாடி மேலதெருவில் வசித்து வருகிறேன். எனது தகப்பனார் பெயர் ஏகநாதன் ஆகும். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் விபத்தில் இறந்துபோன ராபர்ட் ஸ்டான்லியை எனக்கு தெரியும். கடந்த 16/05/2015 ம் தேதி இரவு 11.30 மணியளவில் ராபர்ட் ஸ்டான்லி சோழபுரம் பஸ்ஸ்டாப் அருகே நடுதெருவில் இருந்து அவரது வீட்டிற்கு செல்வதற்காக இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, பஸ்ஸ்டாப்பில் ஒரு பேருந்து நின்று கொண்டிருந்தது. அந்த பேருந்தை கும்பகோணத்தில் இருந்து சென்னையை நோக்கி சென்ற ஒரு அரசு பேருந்து முந்தி சென்றபோது, ராபர்ட் ஸ்டான்லி சென்ற இரு சக்கர வாகனம் மீது மோதியது. அதில் ராபர்ட் ஸ்டான்லிக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. அவரை

108 ஆம்புலன்ஸ் மூலமாக திருப்பனந்தாள் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறினார்கள். மேற்படி பேருந்தை சம்பவத்தன்று ஓட்டிய ஓட்டுநரின் பெயர் கண்ணன் என தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள். அரசு பேருந்தின் பதிவெண் எனக்கு தெரியவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

எதிரி ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 401/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-1/PW-1 | Village: | |
| Name | : ஆரோக்கியசாமி | Age | :68 |
| Father's/Husband's Name | :தெய்வசகாயம் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 20/03/2023**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமை காவலர் திருமதி டென்னிசா மேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது சோழபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். மானம்பாடி எனது சொந்த ஊர் ஆகும். விபத்தில் இறந்துபோன ராபர்ட் ஸ்டான்லி எனது அண்ணன் மகன் ஆவார். கடந்த 16/05/2015 ம் தேதி இரவு 11.30 மணியளவில் ராபர்ட் ஸ்டான்லி தனது இரு சக்கர வாகனத்தில் சோழபுரம் நடுத்தெருவில் இருந்து மானம்பாடியில் உள்ள அவரது வீட்டிற்கு செல்வதற்காக நடுத்தெரு உள்சாலையில் இருந்து கும்பகோணத்திலிருந்து சென்னை செல்லும் மெயின்ரோட்டில் அணைக்கரை செல்லும் திசையில் திரும்பியபோது, தஞ்சாவூரில் இருந்து சென்னை செல்லும் அரசு பேருந்து பேருந்து அங்கு நின்று கொண்டிருந்த மற்றொரு பேருந்தை முந்தி சென்றபோது, மேப்டி ராபர்ட் ஸ்டான்லி

சென்ற இரு சக்கர வாகனத்தின் மீதி மோதி கொஞ்ச தூரம் இரு சக்கர வாகனத்துடன் அவரை இழுத்து சென்றது. நான் சென்று பார்த்து அடிபட்ட ராபர்ட் ஸ்டான்லியை தூக்கி திருப்பனந்தாள் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக அனுப்பி வைத்தேன். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறினார்கள். பின்னர் நான் திருப்பனந்தாள் காவல் நிலையம் சென்று வழக்கு சம்பவம் குறித்து புகார் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு நான் கொடுத்தது தான். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரித்தார்கள். மேற்படி பேருந்தை சம்பவத்தன்று ஓட்டிய ஓட்டுநரின் பெயர் கண்ணன் என்று சொன்னார்கள். அந்த அரசு பேருந்தின் பதிவெண் TN68 என்று தொடங்கும். முழு பதிவெண் தெரியவில்லை. எனது அண்ணன் மகன் அடிபட்டதால் சரியாக பார்க்கவில்லை.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எதிரி ஆஜரில் இருந்தார். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**